முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

# 25B - ஐரோப்பிய வரலாறு

# புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை 2022 (2023)
## 25B - ஐரோப்பிய வரலாறு
## புள்ளித்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| பகுதி I | 1 x 40 | = | 40 |

பகுதி II

| | | |
|---|---|---|
| கட்டாயவினா | - | 12 |
| ஏனைய 03 வினாக்களுக்கு 14x3 வீதம் | - | 48 |
| II பகுதிக்கு மொத்த புள்ளிகள் | - | 60 |


**இறுதிப்புள்ளிகள் = 40 + 60 = 100**

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவணைட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

AL/2022(2023)/25B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி I)
History of Europe II (Part I)

**25 B** **T** **II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல்
கி.பி. 1989 வரை

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
* பகுதி I இல் 1 - 40 வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
* பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி விதம் உரித்தாகும்.
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

● 1 தொடக்கம் 10 வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) பிரனீஸ் (2) அப்பலாச்சியன் (3) அல்ப்ஸ்
(4) அப்பினைன்ஸ் (5) காக்கஸஸ் (......)

2. (1) முடியாட்சி (2) பிரபுக்கள் ஆட்சி (3) குழு ஆட்சி
(4) ஜனநாயக ஆட்சி (5) குருமார் ஆட்சி (......)

3. (1) அனெக்சிமண்டர் (2) சோலோன் (3) பிசிஸ்ராடஸ்
(4) கிளிஸ்தனீஸ் (5) பெரிக்ளிஸ் (......)

4. (1) ஹெரடோடஸ் (2) துசித்தீஸ் (3) பொம்பே
(4) லிவி (5) தசிடஸ் (......)

5. (1) ஹொரஸ் (2) செனகா (3) ஓவிட்
(4) தொலமி (5) ஜுவெனல் (......)

6. (1) மஸசியோ (2) சன்ரோ பொட்டி செலி (3) லியனாடோ டாவின்சி
(4) ராபாயேல் (5) வில்லியம் ஹார்வே (......)

7. (1) வூல்சி (2) சலீ (3) ரிச்சலியு
(4) மசரின் (5) கோல்பெயார் (......)

8. (1) ஜோர்ஜ் வாஷிங்டன் (2) ஜோன் அடம்ஸ் (3) தோமஸ் ஜெபர்சன்
(4) வில்லியம் பிற் (5) அலெக்சாந்தர் ஹமில்டன் (......)

**9.** (1) கம்போ போர்மியோ உடன்படிக்கை
(2) லுனெவில் உடன்படிக்கை
(3) ஏமியன்ஸ் உடன்படிக்கை
(4) ரில்சிற் உடன்படிக்கை
(5) பிரஸ்ட் லிடொட்ஸ்க் உடன்படிக்கை (......)

**10.** (1) தேசிய சங்கம்
(2) பிரித்தானிய பொதுநலவாயம்
(3) வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO)
(4) வார்சோ ஒப்பந்தம்
(5) ஐரோப்பிய ஒன்றியம் (EU) (......)

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**11.** (1) டாடனல்ஸ் நீரிணை - மொறக்கோவும் ஸ்பெயினும்
(2) ஆங்கிலக் கால்வாய் - பிரான்ஸும் இங்கிலாந்தும்
(3) சுயெஸ் கால்வாய் - செங்கடலும் மத்தியதரைக்கடலும்
(4) பனாமா கால்வாய் - அத்லாந்திக் சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும்
(5) கீல் கால்வாய் - வடகடலும் பால்டிக் கடலும் (......)

**12.** (1) பைதகரஸ் - கணிதம்
(2) சோக்கிரடீஸ் - தத்துவம்
(3) பிளேட்டோ - உயிரியல்
(4) அரிஸ்டோடில் - அரசியல்
(5) ஹிபோகிரட்டிஸ் - மருத்துவம் (......)

**13.** (1) வெர்ஜில் - ஈனிட்
(2) புனித ஒகஸ்டின் - கடவுளின் நகரம் (City of God)
(3) புனித தோமஸ் அக்குனாஸ் - சும்மா தியோலாஜிகா
(4) தாந்தே அலிகியரி - இளவரசன் (The Prince)
(5) இராஸ்மஸ் - அறிவின்மையை புகழ்தல் (Praise of Folly) (......)

**14.** (1) எஸ்ரேட்ஸ் ஜெனரல் - பிரான்ஸ்
(2) கோர்ட்டஸ் - ஸ்பானியா
(3) டூமா - ரஷ்யா
(4) ரைஷ்டாக் - ஜெர்மனி
(5) புன்டெஸ்டாக் - நெதர்லாந்து (......)

**15.** (1) தாராளவாதம் - தோமஸ் ஹொப்ஸ்
(2) தலையிடாக் கொள்கை - அடம்ஸ்மித்
(3) பயன்பாட்டுவாதம் - ஜெரமி பெந்தம்
(4) சமவுடைமைவாதம் - கார்ள் மார்க்ஸ்
(5) பாசிஸவாதம் - பெனிடோ முசோலினி (......)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகளின் தொகுதிகள் / திகதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் / **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஹெறகிளிட்டஸ் | A | "அனைத்துப் பொருள்களின் அளவீடும் மனிதனே." |
| (ii) | டிமோகிறடஸ் | B | "தத்துவவியலாளர்கள் அரசர்களாக வேண்டும்." |
| (iii) | புரோடாகரஸ் | C | "இயற்கையிலேயே மனிதன் ஒரு அரசியல் மிருகம்." |
| (iv) | பிளேட்டோ | D | "ஒரே நதியில் இரு தடவைகள் கால்வைக்க முடியாது." |
| (v) | அரிஸ்டோட்டில் | E | "நல்லது என்பதன் கருத்து தவறு செய்யாமல் இருப்பது அல்ல ஆனால் தவறு செய்வதற்கு விருப்பமின்றி இருப்பதாகும்." |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (......)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மக்னா கார்ட்டா (மகாபட்டயம்) | A | இரண்டாம் நிக்கலஸ் சார் |
| (ii) | பகிரங்கமாக சிரச்சேதம் செய்யப்பட்ட இங்கிலாந்து மன்னன் | B | பதினாறாம் லூயி |
| (iii) | இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி | C | முதலாம் சார்ள்ஸ் |
| (iv) | பிரான்சியப் புரட்சியின்போது தூக்கிலிடப்பட்டு மரணமடைந்த பிரான்சிய மன்னன் | D | ஜோன் மன்னன் |
| (v) | போல்ஷெவிக் புரட்சியின்போது சிரச்சேதம் செய்யப்பட்ட ரஷ்யச் சக்கரவர்த்தி | E | றொபட் வொல்போல் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (......)

**18.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | "இளவரசன் நரியையும் சிங்கத்தையும் பாவனை செய்ய வேண்டும்." | A | ஜீன் ஜக் ரூசோ |
| (ii) | "நாங்கள் வாசனைத் திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடி கிழக்குக்கு வந்தோம்." | B | மெட்டர்னிக் |
| (iii) | "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; ஆனால் எங்கும் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்." | C | மசினி |
| (iv) | "இத்தாலி என்பது வெறுமனே புவியியல் வெளிப்பாடு ஆகும்." | D | நிக்கலோ மக்கியவெல்லி |
| (v) | "இத்தாலி தனியாக செயற்பட முடியும்." | E | வஸ்கொ டகாமா |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (......)

**19.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஜேம்ஸ் ஹார்கிறிவ்ஸ் | A | நீர்ச்சட்டம் |
| (ii) | ரிச்சர்ட் ஆர்க்ரைட் | B | புகையிரத எஞ்சின் |
| (iii) | சாமுவேல் குறாம்டன் | C | நீராவி இயந்திரம் |
| (iv) | தோமஸ் நியூகொமன் | D | நூல் நூற்கும் மியூல் இயந்திரம் |
| (v) | ஜோர்ஜ் ஸ்ரீவன்சன் | E | நூல் நூற்கும் ஜென்னி |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (......)

**20.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) | A | வாஷிங்டன் |
| (ii) | உணவு விவசாய தாபனம் (FAO) | B | நியூயோர்க் |
| (iii) | ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான கலாசார ஒழுங்கமைப்பு (UNESCO) | C | உரோம் |
| (iv) | ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (UNICEF) | D | ஜெனிவா |
| (v) | சர்வதேச நாணய நிதியம் (IMF) | E | பரிஸ் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (......)

● 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.

**21.** புராதன உரோம்
(1) இலத்தீன் நகர அரசாக உரோம் ஆரம்பிக்கப்பட்டது.
(2) ஆரம்பத்தில் உரோமில் முடியாட்சி நிலவியது.
(3) கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உரோம் குடியரசானது.
(4) முதலாவது உரோம சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசர் ஆவார்.
(5) மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பின் காரணமாக மேற்கு உரோம சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்தது. (......)

**22.** இஸ்லாம் சமயம்
(1) இஸ்லாம் சமயம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
(2) இஸ்லாம் சமயத்தின் தாபகர் முகம்மது நபி ஆவார்.
(3) முகம்மது நபி ஜெருசலத்தில் பிறந்தார்.
(4) இஸ்லாம் சமயத்தின் புனித சமய நூல் குர்-ஆன் ஆகும்.
(5) இஸ்லாம் சமயம் ஒரு தெய்வக் கோட்பாடு உடையது. (......)

**23.** நாடுகாண் பயணங்கள்
(1) ஆசியாவுக்கான கடற்பாதையைக் கண்டு பிடித்தலே நாடுகாண் பயணங்களின் முக்கிய நோக்கமாகும்.
(2) நாடுகாண் பயணங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஐபீரியக் குடாநாட்டு மக்களே மேற்கொண்டனர்.
(3) கடலோடி ஹென்றி நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கினார்.
(4) 1488 இல் கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஆபிரிக்காக் கண்டத்தின் தென்முனைக்குப் பயணம் செய்தான்.
(5) அமெரிக்கா தேசம் சென்றடைந்த முதலாவது ஐரோப்பிய இனத்தவராக அமெரிக்கோ வெஸ்புசி கருதப்படுகின்றார். (......)

**24.** ஜெர்மனியின் ஐக்கியம்
(1) 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை ஜெர்மனி 350 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான அரசுகளைக் கொண்டிருந்தது.
(2) வியன்னா உடன்படிக்கையினால் ஜெர்மனி 39 அரசுகளைக் கொண்ட கூட்டமைப்பாக ஒழுங்கமைக்கப்பட்டது.
(3) ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்துக்கு மெட்டர்ணிக் ஆதரவு வழங்கினான்.
(4) பிரஷ்யாவின் தலைமைத்துவத்தின் கீழ் ஜெர்மனி ஐக்கியப்படுத்தப்பட்டது.
(5) 1871 இல் முதலாம் வில்லியம் ஐக்கிய ஜெர்மனியின் கைசராக நியமிக்கப்பட்டார். (......)

**25.** ஐக்கிய நாடுகள் சபை
(1) 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டது.
(2) ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான தலைமை அலுவலகம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
(3) ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கம் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதாகும்.
(4) அதன் முக்கிய உத்தியோகபூர்வ நிறுவனங்களில் ஒன்று பொதுச் சபையாகும்.
(5) த்ரிக்வி லீ என்பவர் இதன் முதல் பொதுச் செயலாளர் ஆவார். (......)

● 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் ........................ 1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ........................ 2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ........................ 3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின் ........................ 4 எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ........ 5 எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** பிரித்தானிய பாராளுமன்றம் தொடர்பிலான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) பிரித்தானியாவிலும் விட அயர்லாந்திலும் அதி உன்னத சட்டவாக்க தாபனம் பாராளுமன்றம் ஆகும்.
(B) பிரித்தானிய பாராளுமன்றம் அரசனையும் பொது மக்கள் பிரதி நிதிகள் சபை, பிரபுக்கள் சபை என்ற இரு சபைகளையும் உள்ளடக்கியதாகும்.
(C) பிரித்தானிய பாராளுமன்றம் 15 ஆம் நூற்றாண்டில் ஆலோசனைச் சபையாக ஆரம்பிக்கப்பட்டது.
(D) முதலாம் ஜேம்ஸ் பாராளுமன்றம் தொடர்பில் சாதகமான கொள்கைகளைப் பின்பற்றினார். (......)

**27.** மறுமலர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) மறுமலர்ச்சி ஜேர்மனியில் ஆரம்பமானது.
(B) மறுமலர்ச்சிக் காலத்தில் அறிவியல், கலைகள் ஆகியவை பாரிய மலர்ச்சி அடைந்ததைக் காணக்கூடியதாயிருந்தது.
(C) மறுமலர்ச்சிக் காலத்தில் மானிடவாதம் முன்னிலை பெற்றுக் காணப்பட்டது.
(D) ஜோன் கல்வின் மறுமலர்ச்சியினால் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தப்பட்டார் எனக் கருதப்படுகின்றது. (......)

**28.** வெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) வெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கை முப்பதாண்டுகால போரை முடிவுக்கு கொண்டுவந்தது.
(B) வெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கை ஐரோப்பாவில் சமயப் போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தது.
(C) ஜேர்மன் அரசுகளின் முழுமையான இறைமையை அங்கீகரித்தது.
(D) புனித உரோம இராச்சியம் பெயரளவினதாக நிலவியது. (......)

**29.** 1848 புரட்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) 1848 புரட்சி 'புராதன ஆட்சிக்கு' (Ancien Regime) எதிராக எழுந்தது.
(B) 1848 புரட்சி முதன் முதலில் பிரான்சில் ஏற்பட்டது.
(C) 1848 புரட்சி புத்திஜீவிகளின் புரட்சி என்று அழைக்கப்பட்டது.
(D) 1848 புரட்சிகளின்போது நெப்போலியன் போனபாட் பிரான்சின் சக்கரவர்த்தி ஆகினான். (......)

**30.** இரண்டாம் உலகப் போர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இரண்டாவது உலகப்போர் அச்சு நாடுகளுக்கும் நேச நாடுகளுக்கும் இடையில் நிகழ்ந்தது.
(B) ஹிட்லரின் வெளிநாட்டுக் கொள்கை இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய விடயமாகும்.
(C) 1945 மே மாதத்தில் ஜேர்மனி சரணடைந்தது.
(D) ஹிரோஷிமா, நாகசாகி என்பவை மீது அணுகுண்டு போடப்பட்டதன் பின்னர் 1945 ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பான் சரணடைந்தது. (......)

● 31 தொடக்கம் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

**31.** அரிஸ்டோட்டிலினால் அதென்ஸில் நடாத்தப்பட்ட பாடசாலை யாது?
(1) அக்ரோபொலிஸ் (2) பார்தினொன் (3) அக்கடமி
(4) லைசியம் (5) கொலாசியம் (......)

**32.** புவியீர்ப்பு பற்றிய விதியை முன்வைத்தவர் யார்?
(1) நிக்கலஸ் கொப்பனிகஸ் (2) டயிகோ பிராஹே (3) ஜொகனஸ் கெப்லர்
(4) கலிலியோ கலிலி (5) ஐசக் நியூட்டன் (......)

**33.** ஒவ்வொரு ஜெர்மன் இளவரசனும் தனது குடிமக்களின் சமயத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை எது?
(1) லோடி சமாதான உடன்படிக்கை
(2) ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை
(3) பிராக் சமாதான உடன்படிக்கை
(4) பிரெஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை
(5) பாரிஸ் சமாதான உடன்படிக்கை (......)

**34.** 1834 இல் சொல்வரின் என்ற சுங்கவரி சங்கம் எந்த நாட்டில் தாபிக்கப்பட்டது?
(1) பிரஷ்யா (2) பிரான்சு (3) ஆஸ்திரியா
(4) ரஷ்யா (5) நெதர்லாந்து (......)

**35.** பிரான்சின் ஐந்தாவது குடியரசின் முதலாவது ஜனாதிபதி யார்?
(1) கொன்ரட் அடினோர் (2) சார்ள்ஸ் டிகோல் (3) ஜோர்ஜ் பொம்பிடு
(4) பிரான்சுவா மித்தரோன் (5) ஹெல்மட் கோல் (......)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | "நற்குணங்களே அறிவு" என்ற கோட்பாட்டை விளக்கி சோக்கிரட்டீஸ் 'குடியரசு' (The Republic) என்ற அவரது புகழ்பெற்ற அரசியல் நூலை எழுதினார். | மஸிடோனியாவின் பிலிப்பினுடைய மகனான அலெக்சாந்தருக்கு ஆசிரியராக அரிஸ்டோட்டில் சேவை செய்தார். | (.........) |
| **37.** | எல்லா ஹியூகனோர்களினதும் சமய சுதந்திரம் அரசியல் உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்திய நான்டிஸ் பிரகடனம் பிரான்சின் சமயப் போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தது. | ஹியூகனோர்கள் தொடர்பில் பெரிதும் தாராளமய கொள்கைகளை றிச்சலியு பின்பற்றினார். | (.........) |
| **38.** | 1848 புரட்சி ஆஸ்திரியாவில் மெட்டர்னிக் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்த வழியேற்படுத்தியது. | ஆஸ்திரியா வெற்றியடைந்ததுடன் ஏழு கிழமைப் போர் முடிவுக்கு வந்தது. | (.........) |
| **39.** | முதலாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியில் நடைமுறையிலிருந்த வைமர் ஆட்சி முறையின் அடிப்படை அம்சமாக ஜனநாயகத்தில் அவதானம் செலுத்தியமை விளங்கியது. | தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும் பிரதிநிதிகள் சபை இரண்டினையும் சட்டவாக்கபூர்வமானதாகக் கொண்ட குடியரசைப் பிரகடனப்படுத்தி வைமர் அரசியல் யாப்பு சர்வசன வாக்கெடுப்பு மற்றும் அமைச்சரவை அரசியல் முறைமைக்கு வழியேற்படுத்திக் கொடுத்தது. | (.........) |
| **40.** | 1929 இல் லட்டரன் உடன்படிக்கை மூலம் வத்திக்கான் நகரத்தை இறைமையுள்ள இராச்சியமாகவும் கத்தோலிக்க மதத்தை உத்தியோகபூர்வ அரசின் மதமாகவும் இத்தாலி ஏற்றுக் கொண்டது. | மிகாயில் கொர்பச்சேவ்வின் கிளஸ்நொட்ஸ் (திறந்த தன்மை) பெரெஸ்ரோயிக்கா (பொருளாதார மறுசீரமைப்பு) என்ற கொள்கைகள் 1980 களில் சோவியத் சமூகத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன. | (.........) |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **25B**

විෂයය / பாடம்: **ஐரோப்பிய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 1 | 21. | 4 | 31. | 4 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 3 | 32. | 5 |
| 03. | 1 | 13. | 4 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 5 | 24. | 3 | 34. | 1 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 2 | 35. | 2 |
| 06. | 5 | 16. | 3 | 26. | 1 | 36. | 4 |
| 07. | 1 | 17. | 2 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 5 | 38. | 3 |
| 09. | 5 | 19. | 4 | 29. | 3/5 | 39. | 5 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 5 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

25 B T II

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
* பகுதி II ஆனது A, B, C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.
* பகுதி A இன் வினா கட்டாயமானது.
* பகுதி B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு ஐரோப்பாவின் புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப்** பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) பிரனீஸ் | (ii) அட்ரியாற்றிக் கடல் | (iii) எல்ப் நதி |
| (iv) ஜிப்ரோல்டர் நீரிணை | (v) பரிஸ் | (vi) ஆஸ்திரியா |
| (vii) சென் பீற்றஸ்பேர்க் | (viii) வோல்கா நதி | (ix) சைப்பிரஸ் |
| (x) கிரிமியா | (xi) மஞ்செஸ்டர் | (xii) கீல் கால்வாய் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** (i) கிரேக்க நகர ஆட்சியின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

(ii) இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புராதன கிரேக்கர்களின் சாதனைகளைப் பற்றி சுருக்கமாக மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**3.** (i) தேசிய அரசு ஒன்றின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியாவில் **அல்லது** இங்கிலாந்தில் தேசிய அரசு வளர்ச்சியடைந்த விதத்தினை பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**4.** "நவீன ஐரோப்பாவை வடிவமைப்பதில் பிரான்சியப் புரட்சி தீர்மானமிக்க காலப் பகுதியைக் குறிப்பதாக உள்ளது."

(i) பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தில் தாக்கி உடைக்கப்பட்ட சிறைச்சாலையின் பெயர் தருக. (01 புள்ளி)

(ii) பிரான்சியப் புரட்சியின் தலைவர்கள் இருவரின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சியில் முக்கிய கட்டங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பிரான்சியப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளில் முக்கிய கவனம் செலுத்தி இந்தப் புரட்சி நவீன ஐரோப்பாவை வடிவமைப்பதில் தீர்மானம் மிக்க காலப்பகுதியைக் குறிப்பதாக இருக்கும் முறையினை பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) உரோமப் பேரரசில் கிறிஸ்தவ சமயம் பரவுதலும் அதன் வெற்றியும்
   (ii) மானிய முறையின் வீழ்ச்சி
   (iii) மார்ட்டின் லூதர்
   (iv) 1688 - 1689 ஆங்கிலப் புரட்சி

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6. (i) வியன்னா மாநாட்டின் பின்னணியை விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (ii) வியன்னா மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்களைக் கருத்திற் கொண்டு இம்மாநாடு ஐரோப்பாவில் அரசியல் உறுதித்தன்மையை மீண்டும் தாபித்த முறையினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

7. "கூட்டணி அமைப்பு (உடன்படிக்கை) முறையும் ஐரோப்பா இரண்டு போர் அணிகளாகப் பிரிவுபட்டமையுமே முதலாம் உலகப்போர் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததாக்கும் நிலைமையை ஏற்படுத்தியது."
   (i) கூட்டணி அமைப்பு (உடன்படிக்கை) முறையை ஆரம்பித்தவர் யார்? (01 புள்ளி)
   (ii) முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரணமான உடனடி சம்பவம் எது? (01 புள்ளி)
   (iii) முதலாம் உலகப்போர் ஆரம்பமானபோது ஐரோப்பிய வல்லரசுகள் இரு முகாம்களாகப் பிரிந்திருந்த முறையினை விளக்குக. (04 புள்ளிகள்)
   (iv) கூட்டணி அமைப்பு (உடன்படிக்கை) முறையும் ஐரோப்பா இரு முகாம்களாகப் பிரிந்தமையும் முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு எவ்வளவுக்குக் காரணமாக இருந்தன என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

8. 1962 வரை ஐரோப்பாவின் அரசியலில் பனிப்போர் தாக்கம் செலுத்திய விதத்தினைப் பற்றிக் கருத்துரைக்குக. (16 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) [illegible] முறை
   (ii) [illegible] பாராளுமன்றம்
   (iii) [illegible] சங்கம்
   (iv) [illegible] ஹிட்லர்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

| | | |
|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය II<br>ஐரோப்பிய வரலாறு II<br>History of Europe II | 25 B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



# 25- B- ஐரோப்பிய வரலாறு

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை 2022 (2023)

**(01)** உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| **(i)** பிரனீஸ் | **(ii)** அட்ரியாற்றிக் கடல் | **(iii)** எல்ப் நதி |
| **(iv)** ஜிபிரோல்டர் நீரிணை | **(v)** பாரிஸ் | **(vi)** ஆஸ்திரியா |
| **(vii)** சென் பீற்றர்ஸ்பேர்க் | **(viii)** வோல்கா நதி | **(ix)** சைப்பிரஸ் |
| **(x)** கிரீமியா | **(xi)** மன்செஸ்டர் | **(xii)** கீல் கால்வாய் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

**(02).** **(i)** கிரேக்க நகர ஆட்சியின் முக்கிய அம்சங்களை பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

**(ii)** இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புராதான கிரேக்கர்களின் சாதனைகளை பற்றி சுருக்கமாக மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**I. கிரேக்க நகர ஆட்சியின் முக்கிய அம்சங்களை பரிசீலிக்குக.**

- நகரத்தை அடிப்படையாக கொண்ட சுயாதீன அரசுகளாக விளங்கியமை (ஏதேனஸ், ஸ்பாட்டா, கொரிந், தீபஸ், ஆகோஸ், சமோஸ், மிலேட்டஸ், டிலோஸ், மெகாரா)
- சிறிய நிலப்பரப்பை உடையது.
- எண்ணிக்கையில் குறைந்தளவு சனத்தொகையை கொண்டது.
- சமூக கட்டமைப்பு 03 ஆக பிரிக்கப்பட்டிருந்தது (குடிமக்கள், வெளிநாட்டவர் மற்றும் அடிமைகள் (ஒரு சில இடங்களில் பெண்கள் வேறு பிரிவினராக குறிப்பிடப்பட்டுள்ளனர்.)
- நகரத்தில் குடிமக்கள் சகல விதமான வரபிரசாதங்களையும், சலுகைகளையும் அனுபவித்ததோடு அடிமைகள் கூலிகளாக கருதப்பட்டனர்.
- பலவித அரசியல் முறைகள் காணப்பட்டன. (முடியாட்சி, பிரபுக்களின் ஆட்சி, உயர்குடி ஆட்சி, மக்களாட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி முறைகள்)
- விவசாயம் மற்றும் வர்த்தகம் பிரதான பொருளாதாரமாக காணப்பட்டது.

**(08 புள்ளிகள்)**

## II. இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புராதன கிரேக்கர்களின் சாதனைகள்

**இலக்கியம்**

- ❖ வீர காவியங்கள் (மகாகாவியங்கள்) – ஹோமரின் இலியட் மற்றும் ஓடிசி
  கெசியோட்
- ❖ கவிதைகள் - பிண்டர் மற்றும் கவிஞரான சப்பொவின் கவிதைகள்
  அல்சியஸ்
- ❖ நாடகம்
  - இன்பியல் நாடகம் -
    அரிஸ்ரேபெனஸ் - (The Frogs மற்றும் The Clouds), மனண்டர்
  - துன்பியல் நாடகம்
    ஈஸ்கைலஸ் - The Persins, the Oresteia. செபொக்கிஸ்சின் Oedipus Rex, என்றிக்கனி, இலக்ரா, யூரிபிடிஸ் The Trojan Women, Medea, ஏல்செஸ்டிஸ்

- ❖ வரலாற்று நூல் - ஹெரோடட்சஸ் The Histories, கிரேக்க பாரசீக யுத்தம்
  துசிடைட்டின் பெலப்பெசிய யுத்தம்
  சினோபன், பெலிமியஸ்
- ❖ தழுவல் நூல்கள் - ஹெசியடின் வேலையும் நாளும் / ஈசொப்பின் தழுவல் கதைகள்

**விஞ்ஞானம்**

- ❖ முதல் விஞ்ஞனிகள் - மிலேட்டஸ் விஞ்ஞானிகள் (Miletus School)
- ❖ புவியை சூழவுள்ள மூலப்பொருட்கள் தொடர்பான கருத்துக்கள் தோன்றியது.
  - ✓ அனக்சிமெண்டர் ( கி.மு. 611 - 547– நீர் பிரதானமானது
  - ✓ என்கிமீனஸ் - காற்று பிரதானமானது.
  - ✓ எம்படோக்கிள்ஸ்
- ❖ தேலீஸ் (கி.மு 636 – 546) - புவி தோன்றியது தொடர்பான கருத்துக்களை முன்வைத்ததோடு, வானவியல், புவியியல், கேத்திரகணிதம் தொடர்பாக கவனம் செலுத்தினார்.
- ❖ ஹிபோகிரட்டிஸ் (கி.மு 460 – 377) - நோய்கள் இயற்கையின் செயற்பாடு என்று விளக்கியுள்ள இவர் வைத்தியதுறையின் தந்தையாகவும் கருதப்படுகின்றார்.
- ❖ பைதகரஸ் - பைதகரஸ் தேற்றம், கேத்திரகணித முறை, எண்கள்தான் அடிப்படை
- ❖ டிமோகீரிற்ரஸ் (கி.மு 460) – அணு தொடர்பான கருத்து
- ❖ ஆக்கிமிடிஸ் - (கி.மு 289 -212) – நீர் அமுக்க விதி - பௌதிகத்துறையில் சிறப்பு
- ❖ தொலமி - புவி சரிதவியலாளரான இவர் முதல் முறையாக உலக புறவுருவப்படத்தை வரைந்தார்.
- ❖ ஏபியஸ் ஹெரக்லீடஸ் - ஒடுக்கத்தின் மூலம் செயற்பாடுகள் மாறும்
- ❖ எனக்ஷிகோரஸ் - (கி.மு. 503 – 428) அட்சர கணிதம்

**(08 புள்ளிகள்)**

**(03) (i)** தேசிய அரசு ஒன்றின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

**(ii)** பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியாவில் அல்லது இங்கிலாந்தில் தேசிய அரசு வளர்ச்சியடைந்த விதத்தினை பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**I. தேசிய அரசு ஒன்றின் முக்கிய அம்சங்கள்**

- ஐரோப்பா மத்திய காலத்தில் இருந்து நவீன காலத்திற்கு மாறியாதால் அரசியல் மத்தியமயப்படுத்தப்பட்டமை முக்கிய அம்சமாகும்.
- வரையறுக்கப்பட்ட எல்லைகளையும், பூகோள அமைவிடத்தையும் கொண்டிருத்தல், ஒரே மொழியை பேசுகின்ற, ஒரே இனத்தைச்சார்ந்த, பொது மொழியை பேசுகின்ற, பொது கலாச்சாரத்தை கொண்ட மக்கள் குழுவினர் வாழ்தல்
- தேசிய ஒற்றுமை காணப்பட்டது.
- அதிகாரங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டதால் பலமான மத்திய அரசு தோற்றம் பெற்றது. (புதிய மன்னராட்சி)
- நிரந்திர இராணுவ படைகள் காணப்பட்டது.
- நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் மற்றும் இராணுவத்தை இணைத்துக்கொண்டதால் நிர்வாகம் வினைத்திறன்மிக்கதாக காணப்பட்டது.
- மத்தியதர வர்க்கத்தினரையும் நிர்வாக நடிவடிக்கையில் இணைத்துக்கொள்ளப்பட்டது.
- மத்திய காலத்தில் பலம் வாய்ந்தவர்களாக காணப்பட்ட பிரபுகளின் அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்பட்டது.
- ஒரே சட்டம், நீதிமன்றம் மற்றும் நிர்வாக முறை காணப்பட்டது.
- நாடுகாண்பயனங்களுக்காக அரசு அனுசரணை வழங்கியது.
- குடியேற்றவாதம் தோற்றுவிக்கப்பட்டது.

(06 புள்ளிகள்)

**(ii)** பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியாவில் அல்லது இங்கிலாந்தில் தேசிய அரசு வளர்ச்சியடைந்த விதத்தினை பரிசீலிக்குக.

**<u>ஸ்பானியா</u>**

- போர்டினட் மற்றும் இசபெலா அரசியின் ஆட்சிக்காலத்தில்
  - 1469 ம் ஆண்டு இருவருக்கும் இடையில் இடம்பெற்ற திருமணம் ஏரகன் மற்றும் கெஸ்டில் அரசு ஒன்றினைந்தது.
  - 1491 ம் ஆண்டு முஸ்லீம்கள் கிரனடாவின் ஆட்சியாளர்களை துரத்திவிட்டு அப் பிரதேசத்தை கைப்பற்றிக்கொண்டனர்.
  - 1512 – நவாரையும் இணைத்துக்கொள்ளல்
  - பலம் வாய்ந்த இராணுவம் மற்றும் கடற்படையை உருவாக்கியமை மற்றும் வெடிப்பொருட்களின் ஆதிக்கத்தை பெற்றுக்கொள்ளுதல்
  - ஒரே நீதி முறையை ஏற்படுத்தியமை, பிரபுகளின் அதிகாரத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வாக அதிகாரத்தை மத்தியமயப்படுத்துதல்

- நாடுகாண்பயனங்களுக்காக அனுசரனை வழங்குதல் (கிரிஸ்டோபர் கொலம்பஸ்) இதன் மூலம் தென் மற்றும் மத்திய அமெரிக்காவை கைப்பற்றி குடியேற்றங்களாக்கி அங்கிருந்து தங்கம், வெள்ளி போன்ற பொருட்களை ஸ்பானியாவுக்கு கொண்டு சென்றனர். (வணிகவாதம்)
- வர்த்தகத்தை விரிவுப்படுத்தியதன் மூலம் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.
- திருமண தொடர்புகள்மூலம் பலம்வாய்ந்த அரசை உருவாக்கிக்கொள்ளுதல்.

❖ 5ம் சாள்ஸ் பேரரசருடைய ஆட்சிக் காலத்தில்

- 1516 ம் ஆண்டு ஸ்பானியாவின் ஆட்சியாளரானார்.
- 1519 ம் ஆண்டு ஸ்பானியாவின் கிளர்ச்சியை கட்டுப்படுத்தி ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் மற்றும் புனித உரோம பேரரரசு பதவியை பெற்றுக்கொள்ளதல்.
- பெற்றோர் இருவர்களிடமிருந்து அதிகளவிலான பேரரசுகளின் உரிமைகளை பெற்றுக்கொண்டார்- - ஒஸ்திரியா, ஜேர்மனியின் ப்பிளான்டர்ஸ், பர்கன்ட், லக்சம்பர்க், மற்றும் ஸ்பானியா, இத்தாலியின் பிரதேசமான சார்ட்டினியா, நேபல்ஸ் மற்றும் சிசிலி போன்ற பிரதேசங்களை பெற்றுக்கொண்டார்.
- ஸ்பானியாவுக்கு ஒல்லாந்தின் ஒரு பகுதி கிடைக்கப்பெற்றது.
- பிரபுகளின் அதிகாரங்களை குறைத்ததோடு இராணுவத்தை பலப்படுத்தியமை
- நாடுகாண்பயனங்களுக்கு அனுசரனை வழங்கப்பட்டமையினால் 1519 ம் ஆண்டு மெக்சிகோவையும் , 1524 -1526 ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலப்பகுதயில் மத்திய அமெரிக்காவின் கௌதமால, நிக்ரகுவா மற்றும் ஹொண்டுராஸ் போன்ற பிரதேசங்களை கைப்பற்றிக்கொண்டனர். 1535 ம் ஆண்டு அளவில் பிரரோவினால் பேரு, கொலம்பியா, அயர்ஸ், புவனோஸ் போன்ற பிரதேசங்களும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டன.
- 1526 ம் ஆண்டு மெட்ரிட் உடன்படிக்கையின் மூலம் மிலான், நேப்பிள்ஸ், பர்கட் போன்ற பிரதேசங்களையும் இணைத்துக்கொள்ளப்பட்டது.
- 1547 ம் ஆண்டு துருக்கி பேரரசுடன் ஐந்து வருட திட்டத்தில் கைச்சாத்திட்டமை
- இவ்வாறு 16ம் நூற்றாண்டளவில் ஸ்பானியா ஐரோப்பாவில் பலம்வாய்ந்த தேசிய அரசாக தோற்றுவிக்கப்பட்டது. (ஸ்பானியாவின் பொற்காலம் என குறிப்பிடப்படலாம்)

<u>இங்கிலாந்து</u>

❖ 7ம் ஹென்றி மன்னனுடைய ஆட்சிக்காலத்தில்

- இவர் லங்காஸ்டர் வம்சத்தை சார்ந்தவர். 1485 ம் ஆண்டு இடம்பெற்ற ரோசாப்பூ யுத்தத்தில் வெற்றிப்பெற்றார். தியூடர் என்ற புதிய அரசவம்சத்தை ஆரம்பித்து பின் சிம்மாசனத்தை பெற்றுக்கொண்டான்.
- யோர்க் வம்சத்தை சார்ந்த எலிசபத் இளவரசியைத் திருமணம் செய்துக்கொண்ட பின்னர் லென்கெஸ்டிரியான் யோர்க் வம்சம் வளர்ச்சியடைந்தது.
- 1487 ம் ஆண்டு லொம்பட் சிமினலின் கிளர்ச்சியையும், 1492 ம் ஆண்டு பர்கின் வோகேக்கின் கிளர்ச்சியையும் கட்டுப்படுத்தினார்.
- தனிப்பட்ட பதவிகள் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினைகளை (கரடி, வெள்ளை சிங்கம், மின்னும் நட்சத்திரம்) போன்றவற்றை இல்லாதொழித்தார்.
- ஸ்டார் செம்பர் நீதிமன்றத்தை அமைத்தார்.
- மத்தியதர வர்க்கத்தின் உதவிகளை பெற்றுக்கொண்டு நிர்வாகத்தை வலுப்படுத்தினார்.

- நவீன ஆயுதங்களுடனான கடற்படையினை அமைத்தார்.
- வர்த்தகத்தை விரிவுப்படுத்தினார்.
- ஜோன் கபோட் மற்றும் செபஸ்தியன் கபோட் இருவருக்கும் நாடுகாண பயணங்களுக்காக அனுசரனை வழங்கினார்.
- விவசாயத்தை வளர்ச்சியடைய செய்தார்.

❖ 8ம் ஹென்றி மன்னனுடைய ஆட்சிக் காலம்

- பாப்பரசரின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி சமயத்தை அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.
- பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பை உறுதிப்படுத்திக்கொண்டார்.
- பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பினார்.
- திருமண தொடர்புகள் மூலம் அதிகாரத்தை விரிவாக்கிக்கொண்டார். ( ஸ்பானியாவில் கெத்தரினா மற்றும் பிரான்சின் ஏன் பொலீன்)

❖ 1ம் எலிசபத் அரசியின் ஆட்சி காலம்

- கடற்படையினரை அதிகரித்துக்கொண்டு ஸ்பானியா தோல்வியடைந்தது எனும் எண்ணக்கருவை முறியடித்தார்.
- சமய ரீதியில் நடுநிலை கொள்கையை பின்பற்றினார்.
- பாராளுமன்றின் ஒத்துழைப்புக்களை உறுதிசெய்துக்கொண்டார்.
- வர்த்தகத்தை விரிவுப்படுத்தினார்.

**(10 புள்ளிகள்)**

**(04).** “நவீன ஐரோப்பாவவை வடிவமைப்பதில் பிரான்சியப் புரட்சி தீர்மானமிக்க காலப் பகுதிதியைக் குறிப்பதாக உள்ளது”

(i) பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தில் தாக்கி உடைக்கப்பட்ட சிறைச்சாலையின் பெயர் தருக (01 புள்ளிகள்)

(ii) பிரான்சியப் புரட்சியின் தலைவர்கள் இருவரின் பெயர்களை தருக. (02 புள்ளிகள்)

(iii) பிரான்சிய புரட்சியில் முக்கிய கட்டங்களை பற்றி சுருக்கமாக குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பிரான்சியப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளில் முக்கிய கவனம் செலுத்தி இந்த புரட்சி நவீன ஐரோப்பாவை வடிவமைப்பதில் தீர்மானம் மிக்க கலப்பகுதியைக் குறிப்பதாக இருக்கும் முறையினை பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**(I) பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தில் தாக்கி உடைக்கப்பட்ட சிறைச்சாலையின் பெயர் தருக**
பஸ்டீல் முகாம் /சிறைச்சாலை **(01 புள்ளி)**

**(II) பிரான்சியப் புரட்சியின் தலைவர்கள் இருவரின் பெயர்களை தருக**
அபேசியஸ், லபயிட், மீராபோ, டென்டன், ரொபஸ்பியர், மரா(த்) **(02 புள்ளிகள்)**

**(III) பிரான்சிய புரட்சியில் முக்கிய கட்டங்களை பற்றி சுருக்கமாக குறிப்பிடுக**

❖ மத்திய காலம் (1789)
ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டமை, தேசிய சபையை அமைத்தல், டெனிஸ் மைதான உறுதி மொழி, பஸ்ரீல் சிறைச்சாலையை தாக்குதல், மனித உரிமை பிரகடனத்தை வெளியிடுதல் மற்றும் 1791 ம் ஆண்டு அரசியல் யாப்பின்படி அரசாட்சியை அமைத்தல்.

- ❖ பயங்கர ஆட்சி (1792 – 1794)
  கிரோடின்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் 1792 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒஸ்டிரியாவுக்கு எதிராக யுத்த பிரகடனத்தை செய்தனர். 1792 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மன்னர் ஆட்சியை இல்லாதொழித்து கூட்டாட்சி / குடியாட்சியை அமைக்கப்பட்டது. 16 ம் லூயி மன்னர் மற்றும் அவருடைய குடுப்ப உறுப்பினர்கள் ஒரு சிலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 1793 ம் ஆண்டு ஜுன் மாதம் ஜகோபியர்களின் ஆட்சி உருவாக்கப்பட்டது. (பதற்ற நிலை ஏற்பட்டது).
- ❖ 1795 ம் ஆண்டு பணிப்பாளர் சபை ஆட்சியை உருவாக்கினர். (டிரெக்டர் ஆட்சி)
- ❖ 1799 ம் ஆண்டு நெப்போலியன் ஆட்சிக்கு வந்தான்.

**(04 புள்ளிகள்)**

**(iv) பிரான்சியப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளில் முக்கிய கவனம் செலுத்தி இந்த புரட்சி நவீன ஐரோப்பாவை வடிவமைப்பதில் தீர்மானம் மிக்க காலப்பகுதியைக் குறிப்பதாக இருக்கும் முறையினை பரிசீலிக்குக.**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்த அவதானம் செலுத்தி பிரான்ஸ் புரட்சியானது பிரான்ஸ் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றை வடிவமைப்பதில் எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பது குறித்து கலந்துரையாடுவதன் மூலம் விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ❖ சர்வதிகார ஆட்சி முறை வீழ்ச்சியடைந்தது. (பழைய முறை)
- ❖ பிரான்சில் நிலவிய மானியமுறை இல்லாதொழிக்கப்பட்டது.
- ❖ பிரபுகள் மற்றும் மதகுருமார்களின் அதிகாரங்களை இழந்தமை.
- ❖ விவசாயிகளுக்கு சுதந்திரம் கிடைத்ததோடு நில உரிமையும் கிடைத்தமை.
- ❖ மத்தியதர வகுப்பினருக்கு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக சலுகைகள் கிடைத்தமை
- ❖ மனித உரிமை பிரகடனம் வெளியிடப்பட்டது.
- ❖ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் புரட்சியின் தாரகமந்திரம் மற்றும் பிரான்சிய புரட்சியின் கருத்துக்கள் ஐரோப்பா முழுவதும் பரவியதால் தேசியவாதம் மற்றும் லிபரல்வாத இயக்கங்கள் தோற்றம் பெற்றன.
- ❖ நெப்போலியன் யுகம் தோற்றம் பெற்றது.

**(09 புள்ளிகள்)**

**(05).** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கித்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக

**(i)** உரோமப் பேரரசில் கிருஸ்த சமயம் பரவுதலும் அதன் வெற்றியும்
**(ii)** மானிய முறையின் வீழ்ச்சி
**(iii)** மார்ட்டின் லூதர்
**(iv)** 1688 -1689 ஆங்கிலப் புரட்சி **(08 x 2 = 16)**

## I. உரோமப் பேரரசில் கிருஸ்த சமயம் பரவுதலும் அதன் வெற்றியும்

- ❖ புராதான கிரேக்க நாகரித்தில் நிலவியதை போன்றே உரோமிலும் பலதெய்வ வழிப்பாட்டு முறை இடம்பெற்றது. இவ்வாறான சமய சூழ்நிலைகளிலே கி.பி முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உரோம பேரரசில் கிருஸ்தவ சமயம் தோன்றியது.
- ❖ கி.பி. 1ம் நூற்றாண்டில் யூத இனத்தவராக பிறந்த ஜேசுநாதர் 26 வயதில் ஜோவானினால் ஞானஸ்தானம் வழங்கப்பட்டது.
- ❖ ஜேசுநாதரால் புதிய தர்மம் போதிக்கப்பட்டமையால் யூதர்கள் மத்தியில் அவர் மீட்பாளராக கருதி அந்த மதத்தை பின்பற்றியதோடு கிருஸ்தவ சமயம் ஆரம்பமாகியது என்று குறிப்பிடலாம்.
- ❖ ஆரம்ப காலங்களில் கிருஸ்தவ மதத்திற்கு உரோம ஆட்சியாளர்கள் எதிர்ப்புகாட்டவில்லை.
- ❖ இந்த மதத்தின் நம்பிக்கையை பின்பற்றிய தாழ்த்தப்பட்ட அடிமைகளும் காணப்பட்டமை மிக முக்கிய அம்சமாகும். இது ஒருவழிதெய்வ சமய கொள்கை என்பதால் உரோம ஆட்சியாளர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு அந்த எதிர்ப்பு கிருஸ்தவர்களை ஒழிப்பதற்கான செயற்பாடாகவும் வளர்ச்சியடைந்தது.
- ❖ ஆரம்பத்தில் பிராந்திய ஆட்சியாளர்கள் (ஆளுநர்கள்) இதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததோடு அதனை உரோம பேரரசனாலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ( செப்டிமியஸ் சேவருஸ், டேசியஸ், வெலேரியன், டயக்லீஷியன்)
- ❖ இந்த மத ஒழிப்பை கருத்திற்கொள்ளாது கிருஸ்தவ மதம் மேலும் மேலும் மக்கள் மத்தியில் பரவியயோடு ஜேசுநாதரை பின்பற்றுவோர் மற்றும் மதம் பரப்புவோர் உயிர் தியாகம் செய்து தமது மதத்தை பரப்பியதன் விளைவாக அதனை ஒழிக்க முடியாது என்பதை உரோம ஆட்சியாளர்கள் உணர்ந்துக்கொண்டனர். இதனால் இந்த மதத்தை ஒழிப்பதைவிட அதற்கு அனுசரணை வழங்குவது சிறந்தது என்று கருதினார்கள்.

**(08 புள்ளிகள்)**

## II. மானிய முறையின் வீழ்ச்சி

- ❖ மானியமுறை என்பதை சுருக்கமாக அறிமுகமம் செய்திருத்தல் வேண்டும். மத்திய காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய சமூக பொருளாதார மற்றும் அரசியல் முறையை மானிய முறை என்று குறப்பிடலாம். 15ம், 16ம் நூற்றாண்டுகளில் அவை வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

- ❖ சிலுவை யுத்தத்தில் ஐரோப்பியர்கள் கலந்துக்கொண்டதன் விளைவாக சிறந்த முறையில் வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை.
- ❖ ஒரு சில பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்தமையினால் சுயதேவை பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை.
- ❖ பணப்புலக்கம் நிலவியதால் மத்தியதர வர்க்கத்தினர் வர்த்தகத்தில் வளர்ச்சியடைந்தமை
- ❖ நகரங்கள் தோற்றம் பெற்றமை
- ❖ தேசிய அரசுக்கள் தோற்றம்பெற்றமை
- ❖ மலேரிய போன்ற தொற்றுநோய்கள் ஏற்பட்டமை

**(08 புள்ளிகள்)**

## III. மார்ட்டின் லூதர்

- ❖ 1483 ம் ஆண்டு ஜேர்மன் பிரதேசத்தின் நியுரிஞ்சாவின் எயிஸ்லயின்பேன்னில் பிறந்தர்.
- ❖ சட்டத்தரணியான இவருடைய தந்தைக்கு இவரை சட்டத்தரணியாக்க வேண்டும் என எதிர்பார்ப்பாக இருந்த போதும் தாய் கிருஸ்தவ மத பக்தியில் சிறந்து விளங்கியதால் இவர் மதம்சார்ந்த விடயங்களில் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டார்.
- ❖ 1511 ம் ஆண்டு விக்டன்பேர்க் பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர் கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்களை விமர்ச்சித்தார். அத்தோடு 1517 ம் ஆண்டில் பாவமன்னிப்பு பத்திரம் விற்பனை செய்வதற்கு கடுமையாக விமர்ச்சித்தார்.

- ❖ 1517 ம் ஆண்டு 95 நியாயங்கள் உள்ளடங்கிய விமர்சனத்துக்குரிய விடயங்களை விற்றன்பேர்க் ஆலயத்தின் கதவில் ஒட்டப்பட்டதோடு இவர் சமய சீர்திருத்தவாதியாக தமது செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்தார்.
- ❖ திருச்சையின் எதிர்ப்பு இவருக்கு இருந்தபோதும் பெட்டிக் உள்ளிட்ட ஜேர்மன் இளவரசர்கள் ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு இவருக்கு கிடைத்தது. (புரட்டஸ்தாந்து இயக்கம் எழுச்சியடைதல்)
- ❖ 1520 ம் ஆண்டு கத்தோலிக்க திருச்பை புரட்டஸ்தாந்து இயக்கத்தை மறுதளித்ததோடு இவரை நாஸ்திகவாதி என்றும் அறிவித்தது.
- ❖ 1521ம் ஆண்டு புதினித உரோம பேரசரர் வர்மிஸ் டயட் சபைக்கு முன்னால் இவரை அழைத்து தன்னுடைய போராட்டத்தை கைவிடுமாறு கோரிக்கை விடுத்தப்போதும் அவர் அதனை மறுத்துவிட்டார்.
- ❖ இவர் சுவிஸ்சர்லாந்துக்கு தப்பியோடி பைபிளை ஜேர்மன் மொழிக்கு மொழிபெயர்த்து அதனை பிரசுரித்தார்.
- ❖ லூதர்வாதம் ஜேர்மனியின் எல்லா பிரதேசங்களிலும் பரவியதோடு இவர் புரட்டஸ்தாந்து இயக்கத்தின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றார்.

**(08 புள்ளிகள்)**

## IV. 1688 -1689 ஆங்கிலப் புரட்சி

- ❖ பாராளுமன்றத்திற்கும் அரசனுக்கும் இடையிலான அதிகார போட்டி
- ❖ ஸ்டுவட் அரச வம்சத்தினர் அதிகாரத்தை பலப்படுத்திக்கொள்வதற்கு பாராளுமன்றத்தை மதிக்காது செயற்பாடுகளின் ஈடுப்பட்டமை
- ❖ கத்தோலிக்கரான ஸ்டுவர்ட் அரசர்களுக்கும், புரட்டஸ்தாந்துவாதிகளான பாராளுமன்றத்தினருக்கும் இடையலான மோதல் ஏற்பட்டமை

- ❖ பின்னணி
  - ➢ 1642 – சிவில் யுத்தம்
  - ➢ 1649 - முதலாம் சால்ஸ் மன்னரின் தலையை வெட்டியமை
  - ➢ இரண்டாம் சால்ஸ் அரசனாகுதல் மற்றும் அவரின் முறையற்ற ஆட்சி முறை
  - ➢ 1688 புரட்சி
- ❖ விளைவுகள்
  - ➢ பாராளுமன்றத்தில் உரிமைகள் வென்றெடுக்கப்பட்டமை
  - ➢ அரசரின் அதிகாரங்களை மட்டுப்படுத்தியமை.
  - ➢ 1689 ம் உரிமைகள் சட்டம் கொண்டுவரப்பட்டமை

**(08 புள்ளிகள்)**

## பகுதி - C

**(06)** **(i)** வியன்னா மகாநாட்டின் பின்னணியை விபரிக்குக. **(06 - புள்ளிகள்)**

**(ii)** வியன்னா மாகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்களை கருத்திற் கொண்டு இம்மகாநாடு ஐரோப்பாவில் அரசியல் உறுதித்தன்மையை மீண்டும் தாபித்த முறையினைப் பரிசீலிக்குக. **(10 - புள்ளிகள்)**

### I. வியன்னா மகாநாட்டின் ஒன்று கூடியமைக்காகன பின்னணி

- ❖ பிரான்சிய புரட்சி ஆரம்பித்ததிலிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டமையினால் பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையில் யுத்தம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது. இதனால் பிரான்ஸ்சுக்கு எதிரான போர் கூட்டணி ஒன்று தோன்றியது.

- ❖ நெப்போலியன் ஆட்சிக்கு வந்தபின்னர் அந்த எதிர்ப்பு நடவடிக்கை மேலும் அதிகரித்து காணப்பட்டது. இதனால் ஐரோப்பாவின் பலம்வாய்ந்த நாடுகளின் தலைமையில் நெப்போலியனுக்கு எதிரான போர் கூட்டணி ஒன்று தொடர்ந்து உருவாகிக்கொண்டு வந்தது.
- ❖ இவ்வாறு உருவாக்கப்பட்ட முதல் மூன்று போர் கூட்டணிகளின் நோக்கங்கள் தோல்வியடைந்த போதிலும் நான்காவது கூட்டணி நெப்போலியனை தோல்வியடைய செய்தது. (லிப்சிக் போர் மற்றும் நெப்போலியனை வெளியேற்றுதல்)
- ❖ 1814 ம் ஆண்டு வியான்னாவில் ஒன்றுகூடிய ஐரோப்பியர்கள் நெப்போலியனால் சிதைக்கப்பட்ட ஐரோப்பாவின் புறவுருவப்படத்தை மீண்டும் பழையநிலைக்கு கொண்டு வருவதற்கான கலந்துரையாடலில் ஈடுப்பட்டதன் விளைவாக வியன்னா சம்மேளனம் தோற்றம் பெற்றது.
- ❖ வாட்டலூ யுத்தம் மற்றும் வியன்னா சம்மேளனம் தொடர்ந்து முன்னெடுத்து செல்லப்பட்டதால் நெப்போலியன் தோல்வியடைந்தான்.
- ❖ 1815 – வியன்னா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

**(06 - புள்ளிகள்)**

**(ii) வியன்னா மாகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்களை கருத்திற் கொண்டு இம்மகாநாடு ஐரோப்பாவில் அரசியல் உறுதித்தன்மையை மீண்டும் தாபித்த முறையினைப் பரிசீலிக்குக.**

- ❖ ஐரோப்பாவின் ஏனைய நாடுகள் தொடர்பாக தீர்மானத்தை முன்னெடுத்தல் அதன் மூலம் ஒரு நாடு மட்டும் ஆதிக்கம் செலுத்த முடியாது எனும் கருத்தை அடிப்படையாக கொண்டு புராதன மன்னராட்சி முறையை மீண்டும் பலமடைய செய்வது (சட்டபூர்வமற்றவிடயமாகும்.)
- ❖ பிரான்சின் எல்லைகளை 1789 ம் ஆண்டுக்கு முன் இருந்த நிலைக்கு கொண்டுசெல்லுதல் மற்றும் பூர்போன் அரச வம்சத்தை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருதல்.
- ❖ 360 க்கு மேற்பட்ட அரசுகளை முன்பு கொண்டிருந்த ஜேர்மனை 39 அரசுக்களாக உருவாக்கி அங்கு கூட்டாட்சியை ஏற்படுத்தி அதன் தலைமைத்துவத்தை ஒஸ்திரியாவுக்கு வழங்குதல்.
- ❖ ஜேர்மன் பிரதேசத்தில் ஒஸ்திரியா மற்றும் பிரஷ்யாவுக்கு இடையில் அதிகார சமநிலையை ஏற்படுத்துதல். ஒஸ்திரியாவுக்கு லொம்பாடி மற்றும் வெனிஸ்சை பெற்றுக்கொடுப்பதோடு ஏனைய பகுதிகளை பிரஷ்யாவுக்கு பெற்றுக்கொடுத்தல்.
- ❖ இத்தாலியில் சட்ட முறையான ஆட்சி கடுமையாக பின்பற்றப்பட்டதோடு, லொம்பாடி, வெனிஸ் பீட்மோர் சாடினியா, மோடினா, டஸ்கனி, பாப்பரசின் அரசு, நேப்பல், சிசிலி என இத்தலியை பல பகுதிகளாக பிரித்து அவற்றில் மன்னராட்சி முறையை மீண்டும் ஏற்படுத்தியமை
- ❖ 1815ம் ஆண்டில் இருந்து நீண்ட காலம் வரை ஐரோப்பாவில் சமாதனத்தை பாதுகாத்த கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (1854 – 56 ) கிரிமிய யுத்தம் வரை வேறு எந்தவொரு யுத்தமும் அதுவரை இடம்பெறவில்லை. இதன் பின்னரே முதலாம் உலக யுத்தம் ஏற்பட்டது.
- ❖ இந்த சம்மேளனத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல்களை தீர்த்தக்கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டது. ( மாநாட்டின் தீர்மானங்கள் மூலம்)

**(10 - புள்ளிகள்)**

**(07)** "கூட்டணி அமைப்பு ( உடன்படிக்கை) முறையும் ஐரோப்பா இரண்டு போர் அணிகளாகப் பிரிவுப்பட்டமையுமே முதலாம் உலகப்போர் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததாக்கும் நிலையையை ஏற்படுத்தியது"

I. கூட்டணி அமைப்பு ( உடன்படிக்கை) முறையை ஆரம்பித்தவர் யார்? (01- புள்ளி)

II. முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கான காரணமான உடனடி சம்பவம் எது? (01 - புள்ளி)

III. முதலாம் உலப்போர் ஆரம்பமானபோது ஐரோப்பிய வல்லரசுகள் இரு முகாம்களைாக பிரிந்திருந்த முறையினை விளக்குக. (04 - புள்ளிகள்)

IV. கூட்டணி அமைப்பு (உடன்படிக்கை) முறையும் ஐரோப்பா இரு முகாம்களாகப் பிரிந்தமையும் முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு எவ்வளவுக்குக் காரணமாக இருந்தன என்பதை பரிசீலிக்குக. (10 - புள்ளிகள்)

**I. கூட்டணி அமைப்பு ( உடன்படிக்கை) முறையை ஆரம்பித்தவர் யார்?**

ஒடோவொன் பிஸ்மார்க் - ஜேர்மன் **(01 - புள்ளி)**

**II. முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கான காரணமான உடனடி சம்பவம் எது?**

ஒஸ்திய நாட்டு இளவரசன் பிரன்சிஸ் பேர்டினன்ட்டும் அவருடைய மனைவியும் பொஸ்னியாவின் தலைநகரான சரஜிவோ நகரத்தில் சுற்றுலா மேற்கொண்ட போது சேர்பிய நாட்டின் பயங்கரவாத குழு உறுப்பினர் (கவ்ரிலோ பிரன்சிப்) என்பவரால் சுட்டுகொலை செய்தமைமை ஆகும்.

**(01 - புள்ளி)**

**III. முதலாம் உலப்போர் ஆரம்பமானபோது ஐரோப்பிய வல்லரசுகள் இரு முகாம்களைாக பிரிந்திருந்த முறையினை விளக்குக**

- ஜேர்மனியை பாதுகாத்தல் மற்றும் ஜேர்மனியை உலகின் பலம்வாய்ந்த நாடாக உருவாக்கும் நோக்குடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பிஸ்மார்க்கின் ராஜதந்திர கொள்கை உடன்படிக்கை
- அல்செஸ் - லொரைன் பிரச்சினையை கருத்திற்கொண்டு ஜேர்மன் பிரான்சை தனிமைப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையின் மூலம் ஐரோப்பியாவின் முக்கிய நாடுகள் இரு அணிகளாக பிரிந்தமை.
- 1873ம் ஆண்டு ஜேர்மன், ஒஸ்திரியா மற்றும் ரஷ்யா ஒன்றினைந்து மூன்று பேரரசுகளின் சங்கத்தை உருவாக்கிக்கொண்டமை
- பின்னர் ஜேர்மனியினால் ரஷ்யாவுடன் செய்துக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ளாமை
- 1879ம் ஆண்டு ஜேர்மன், ஒஸ்திரியா மற்றும் ஹங்கேரியுடன் செய்துக்கொள்ளப்பட்ட முக்கூட்டு அணியை உருவாக்கிக்கொண்டமை
- 1882ம் ஆண்டு இத்தாலியையும் முக்கூட்டு அணியில் இனைத்துக்கொண்டு அச்சு நாடுகள் அணியை உருவாக்கிக்கொண்டமை
- 1794 ம் ஆண்டு ரஷ்யா மற்றும் பிரான்சுடன் இனைந்து நேச நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்கிக்கொண்டமை
- 1904 ம் ஆண்டு பிரன்ஸ் பிரித்தானியாவுடன் நட்பு நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்கிக்கொண்டமை
- 1907 ம் ஆண்டு ரஷ்யா பிரான்ஸ் - பிரித்தானியாவுடன் இனைந்து நேச நாடுகள் அணியை உருவாக்கிக்கொண்டமை

**(04 - புள்ளிகள்)**

**(iv) கூட்டணி அமைப்பு (உடன்படிக்கை) முறையும் ஐரோப்பா இரு முகாம்களாகப் பிரிந்தமையும் முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு எவ்வளவுக்குக் காரணமாக இருந்தன என்பதை பரிசீலிக்குக**

- புதிய பேரரசுகளை உருவாக்கும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்டிருந்த குடியேற்றவாத கொள்கைகள் தொடர்பான போட்டிகள்
- பிரான்ஸ் மற்றும் ஜேர்மனிக்கிடையிலான குரோத உணர்வு
- ஜேர்மன் பலம்வாய்ந்த நாடாக எழுச்சியடைதல் மற்றும் ஜேர்மனியின் வெளிநாட்டு கொள்கைகள்
- ஜேர்மன் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கிடையிலான கடற்படை பலம் தொடர்பான போட்டி
- ஆயத போட்டிகள்
- இனவாதம் வளர்ச்சியடைதல்
- பால்கன் பிரச்சினைகள்

முதலாம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணிகளை அடிப்படையாக கொண்டு ஐரோப்பா இரு போர் அணிகளாக பிளவுப்பட்டமை தொடர்பாக விளக்குதல் வேண்டும்.

**(10 - புள்ளிகள்)**

**(08). 1962 வரை ஐரோப்பாவின் அரசியலில் பனிப்போர் தாக்கம் செலுத்திய விதத்தினைப் பற்றிக் கலந்துரைக்குக.** **(16 - புள்ளிகள்)**

- ❖ பனிப் (கெடுபிடிப் போர்) என்பது இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான மேற்கத்தேய முதலாளித்துவம் மற்றும் சோவியத்ரஷ்யா தலைமையிலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சமவுடைமைவாதம் அணிகளுக்கிடையில் ஏற்பட்ட ஆயுதம் இல்லாது அரசியல் மற்றும் ராஜதந்திர முறையில் ஏற்பட்ட மோதல் நிலைகளாகும்.
- ❖ இது தோற்றம் பெற்ற காலம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றதோடு பெரும்பாலன புத்திஜீவிகளின் கருத்துக்களின்படி இது 1945 தொடக்கம் 1991 வரையிலான காலப்பகுதியல் இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>பனிப்போர் ஐரோப்பிய அரசியலில் ஏற்படுத்திய தாக்கம்</u>

- ஐக்கிய அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் நேரடியாக யுத்தம் இடம்பெறாத போதும் இரு அணிகளுக்கிடையிலான நம்பிக்கையின்மை மோதல் நிலையாக தொடர்ந்து வளர்ச்சியப்பெற்று வந்தது.
- சோவியத் ரஷ்யா சமவுடமைவாத கருத்துக்களை முழு உலக நாடுகளுக்கும் பரப்புவதாக குற்றம்சாட்டிய ஐக்கிய அமெரிக்கா அதனை தடுப்பதற்கான செயற்பாடுகளை (containment policy) முன்னெடுத்தது.
- ஐரோப்பாவில் கம்மினியூசவாத அதிகாரம் பரவுவதை தடுப்பதற்கு அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.
  - ✓ கிரேக்க சிவில் போராட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் தலையிட்டமை
  - ✓ டமன்னய்- ஜனநாய அரசுக்கும் சர்வதிகார அரசால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்கா அவர்களுக்காக முன்வந்தது.
  - ✓ மார்ஷல் திட்டத்தினூடாக யுத்தத்தினால் பாதிப்படைந்த நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கியது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி போன்ற நாடுகள் அந்த உதவிகளை பெற்றுக்கொண்டு வளர்ச்சியடைந்தது. (சோவியத் ரஷ்யா தலைமையிலான அணிகள் இவ்வாறான உதவிகளை பெற்றுக்கொள்வதை ஸ்டாலின் தடை செய்தார்.)
- ஒவ்வொருவருக்கும் இடையில் இடம்பெற்ற நம்பிக்கையின்மை காரணமாக தன்னுடைய பாதுகாப்பை கருதி ஐரோப்பா யுத்தம் செய்யும் நோக்கில் அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டது. மேற்கத்தேய அணி (நேட்டோ) அமைபுக்கு எதிராக கிழக்கு அணியாக வார்ஷோ அமைபும் உருவாக்கப்பட்டது.
- சோவியத் ரஷ்யாவின் அணிகளின் அரசியல் அதிகாரத்தை பலப்படுத்துவதற்கு சோவியத் ரஷ்யா நடவடிக்கை எடுத்தது.
- இடைக்கிடை இரு அணிகளுக்கு இடையில் ஏற்பட்ட ஏனைய செயற்பாடுகள் காரணமாக பனிப்போர் ஏற்பட்டது.

அரசியல் மற்றும் பொருளாதாரக் கருத்து வேறுப்பாடுகளை கொண்டு இரு அணிகளும் அரசியல் தொடர்புகளை விஸ்தரித்தனர், ரகசிய உளவு சேவைகள் மூலம் எதிரி நாடுகள் தொடர்பான தகவல்களை அறிந்துக்கொள்ளுதல் (யுத்ததந்திரம் தொடர்பாக) தகவல்களை திரட்டுதல். அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான அணுஆயுதம் மற்றும் ஆயுதம் தொடர்பான போட்டிகள் (அணு, நீர்தேக்கம், ஏவுகணை, விமானம், செய்மதி தொழினுட்பம்)

- ஐரோப்பாவுக்கு வெளியில் உள்ள நாடுகளில் ஏற்பட்ட போராட்டத்தில் இரு அணிகளும் தலையிடுதல்

  1948 -58 – பர்லின் பிரச்சினை

  1950 – கொரியா பிரச்சினை

  1956 - ஹங்கேரி பிரச்சினை

  1960 – கொங்கோ பிரச்சினை

  1962 – கியுபா ஏவுகணை பிரச்சினை

**(16 - புள்ளிகள்)**

**(09). பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கித்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக**

(i) காங்கிரஸ் முறை
(ii) பிராங்க்பேர்ட் பாராளுமன்றம்
(iii) சர்வதேச சங்கம்
(iv) அடோல்ப் ஹிட்லர் **(08 x 2 = 16)**

## I. காங்கிரஸ் முறை

- 1815 ம் ஆண்டு வியன்னா சம்மேளனத்தை ஏற்படுத்திக்கொண்ட ஐரோப்பா சமாதானத்தை முன்னெடுத்து செல்லும் நோக்குடன் இம் முறையை ஏற்படுத்திக்கொண்டது.
- ஒஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்த முறையில் முதல் அங்கத்துவம் பெற்ற நாடுகளாகும்.
- 1818 ம் ஆண்டு அய்ச்சிலா ஷெபெல், 1820 ரொப்போ, 1822 லய்பெக், 1822 வெரோனா போன்ற சம்மேளனங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட சமகாலப்பகுதியில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பதற்ற நிலையில் தலையிட முயற்சித்தமை. உதாரணம் இத்தாலி, ஸ்பானியா மற்றும் கிரேக்க சுதந்திர போராட்டம்.
- வியன்னா கங்கிரஸ் முறையின் செயற்பாடுகள் தோல்வியடைந்த போதும் பிற்காலத்தில் முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களுக்கு பின்னர் சர்வதேச அமைப்புக்கள் தோற்றுவிப்பதற்கு இம் முறை முன்னோடியாக இருந்தது.

**(08 - புள்ளிகள்)**

## II. பிராங்க்பேர்ட் பாராளுமன்றம்

- ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதில் ஜேர்மனியின் லிபரல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியாக இதனை கருதலாம்.

<u>பின்னணி</u>

- 1815 ம் ஆண்டு வியன்னா மாநாட்டின் தீர்மானத்தின்படி 363 பிரிவுகளாக இருந்த ஜேர்மன் அரசுகளை 39 பிரிவுகளாக மீண்டும் பிரித்து ஜேர்மன் கூட்டாட்சியை உருவாக்கினர். இதில் ஒஸ்தியா பலம் வாய்ந்த அரசாக காணப்பட்டது. அத்தோடு தனி ஜேர்மன் நாட்டை உருவாக்கும் தகுதி பிரஷ்யாவிடம் காணப்பட்டது.
- இந்த அரசுகளில் லிபரல்வாதம், தேசியவாத இயக்கங்கள் தோற்றம்பெற்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கு ஒஸ்திரியாவின் பிரதமர் மெட்டர்நிக் தொடர்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்தார். 1819 ம் ஆண்டு கொல்ஸ்பாட் பிரகடனத்தின் மூலம் ஜேர்மன் பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த தேசியவாத மாணவர் அமைப்புகளை கலைத்தல், பத்திரிகை சுதந்திரத்தை வரையறுத்தல் போன்ற செயற்பாடுகள் இவரால் முன்னெடுக்கப்பட்டதால் இப் பிரதேசங்களில் லிபரல்வாதம் மற்றும் தேசியவாத இயக்கங்கள் எழுச்சியடையவில்லை.
- இருப்பினும் 1848 ம் ஆண்டு லிபரல்வாதிகளால் ஜேர்மன் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர்.
- 1848 ம் ஆண்டு புரட்சியின் மூலம் பேட்ன், வூடேம்பர், பெவேரியா, சக்சனி, ஹனோவர் போன்ற அரசுகளில் லிபரல் மறுசீரமைப்பு ஏற்பட்டது. (நிலமானிய முறையை இல்லாதொழித்தல், அரசியல் அமைப்பை மறுசீரமைத்தல், பத்திரிகை சுதந்திரம் போன்றவற்றை உறுதிசெய்தல்)
- 1848 ம் ஆண்டு பிரஷ்யாவில் (பேர்லின்) உருவாகிய லிபரல்வாதத்தின் எழுச்சி மிக முக்கிய அம்சமாக விளங்கியது. புரட்சியின் விளைவாக 4ம் பெட்டிக் வில்லியம எனும் ஆட்சியாளன் லிபரல் பாராளுமன்ற ஆட்சி முறைக்கு இணக்கம் தெரிவித்தார்.

**அமைத்தல் மற்றும் தோல்வியடைதல்**

- ஜேர்மனின் **பிராங்க்பேர்ட் பாராளுமன்றத்திற்கு** லிபரல்வாதம் எனும் எண்ணக்கரு வெற்றியாகும்.
- இந்த பாராளுமன்றத்திற்கு இப் பெயர் வருவதற்காகன காரணம் சகல ஜேர்மன் அரசுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தம் வகையில் 500 பிரதிநிதிகள் பிராங்க்பேர்ட் தலைநகரில் ஒன்றுக்கூடியமை ஆகும்.
- இந்த பிரதிநிதிகள் மத்தியதர வகுப்பை சார்ந்த லிபரல்வாதிகளாவர்.
- இதன் பிரதான நோக்கம் ஐக்கிய ஜேர்மனியை உருவாக்குவது. ஒஸ்திரியாவை தொடர்புப்படுத்தாமையை காரணமாக கொண்டு பிராங்க்பேர்ட் பாராளுமன்றம் இரு வேறுப்பட்ட கருத்துக்களை கொண்ட அணிகளாக பிரிந்தது. (பெரிய ஜேர்மன் மற்றும் சிறிய ஜேர்மன்)
- இந்த கருத்து மோதலின் விளைவாக சிறிய ஜேர்மனி (ஒஸ்திரியாவை நீக்கிவிட்டு ஜேர்மனியை ஐக்கியப்படுத்த வேண்டும் என்பதை) வெற்றிக்கொண்டதோடு, பிரஷ்யா மன்னரின் தலைமைத்துவத்தின் கீழ் ஜேர்மன் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்தது.
- இருப்பினும் உடனடி புரட்சியின் மூலம் உருவாக்கிக்கொண்ட லிபரல்வாத ஜேர்மன் பேரசின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள 4ம் பெட்டிக் வில்லியம் விரும்பவில்லை. இதற்கு காரணம் அவர் இந்த லிபரல்வாத வெற்றியை வீழ்சியடைய செய்வதற்கான சந்தர்ப்பத்தை தேடிக்கொண்டிருந்தமையாகும்.
- பிராங்க்பேர்ட்டின் மூலம் ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவது தொடர்பாக வாதவிவாதங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் 1848 ம் ஆண்டு லிபரல்வாத புரட்சியை வெற்றிகொண்டிருந்த ஜேர்மன் குடியரசுகளில் உள்ள இளவரசர்கள் மீண்டும் அவற்றின் அதிகாரத்தை கைப்பறிக்கொண்டனர்.
- 4ம் பிரட்ரிக் வில்லியம் பேர்ளினை மீட்டெடுத்ததோடு ஏனைய பிரதேசங்களில் லிபரல் ஆட்சியை கட்டுப்படுத்துவதற்கு பிரஷ்யா உதவிகளை வழங்கியது.
- இவ்வாறு 1848 ம் ஆண்டு ஐரோப்பாவில் ஆரம்பித்த புரட்சிப் காலாத்தில் ஜேர்மனியில் தோன்றிய லிபரல்வாத புரட்சியின் விளைவாக உருவாக்கப்பட்ட பிராங்க்பேர்ட் பாராளுமன்றம் ஒருவருடம் நிறைவடைய முன்னர் தோல்வியடைந்தது. அத்தோடு ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கும் இதன் பிரதான நோக்கம் நிறைவேறவில்லை.

**(08 - புள்ளிகள்)**

III. சர்வதேச சங்கம்

- முதலாம் உலக யுத்தம் நிறைவடைந்த பின்னர் உலக சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது.
- யுத்தகாலத்தின் போது ஐக்கிய அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதியான வூற்றோவில்சன் அவர்களால் முன்வைக்கப்பட்ட 14 திட்டங்களை அடிப்படையாக கொண்டு இந்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- யுத்தத்தின் இறுதியில் கைசாதிடப்பட்ட பாரிஸ் சமாதான உடன்படிக்கையின் முதல் அத்தியாத்தில் சமாதானமான முறையில் மோதல்களை தீர்த்துக்கொள்வதற்கு பிரதானமான அமைப்பு ஒன்றின் அவசியம் குறித்து குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.
- 1919 ம் ஆண்டு ஜெனீவாவை தலைமையகமாக கொண்டு இந்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- நோக்கம் - உலக சமாதானத்தை பாதுகாத்தல்.
- அமைப்பு - பொதுச் சபை, நிறைவேற்று சபை, செயலகம், நீதிமன்றம், தொழிலாளர் – சுகாதார நிதியம் போன்ற பல்வேறு நிறுவனங்களை கொண்ட சங்கமாக காணப்பட்டது.
- ஐக்கிய அமெரிக்கா இதில் அங்கத்துவம் பெறாமை, உறுப்பு நாடுகள் சங்கத்தின் செயற்பாடுகளை மீறி நடத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் சர்வதேச சங்கம் வீழ்ச்சியடைந்தது.

**(08 - புள்ளிகள்)**

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

## IV. அடோல் ஹிட்லர்

- 1889 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் திகதி ஒஸ்திரியா - ஹங்கேரி போனாவில் எலோய் ஹிட்லர் மற்றும் கிலாரா போல்சல் தம்பதியினருக்கு அடோல் ஹிட்லர் மகனாக பிறந்தார்.
- குடும்பத்தில் ஏனைய பிள்ளைகளை விட வித்தியசமனவராக கருதப்பட்ட இவர் ஓவியக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். மதகுருவாக வேண்டு என்று இராணுவத்தில் இணைந்த போது அவரிடத்தில் இருந்த அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.
- ஜேர்மன் நாடு மீது அதிக பற்று கொண்ட இவர் எந்நேரமும் ஜேர்மனியின் தேசிய கீதத்தை பாடிக்கொண்டே இருப்பார் என்று கூறுவார்கள்.
- 1913 ம் ஆண்டு ஜேர்மனிக்கு சென்ற இவர் குடியுரிமையை பெற்றுக்கொண்டு இராணுவத்தில் இணைந்துக்கொண்டார். முதலாம் உலக யுத்தத்தில் கலந்துக்கொண்டார். ஜேர்மன் கடுமையாக பாதிப்படைந்திருந்த வேர்சையில் உடன்படிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.
- 1920 ம் ஆண்டு ஜனநாயக ஜேர்மன் தொழிலாளர் கட்சியை உருவாக்கினார். (நாஜியை அமைத்தல்)
- 1921 ம் ஆண்டு மியுனிச் நகரத்தை கைப்பற்றும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சியினால் சிறைவாசம் சென்றார். இங்கு **எனது போராட்டம் (Mein Kampf)** எனும் நூலை எழுதினார்.
- 1933 ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற பொதுதேர்தலில் ஜேர்மனின் சான்சலாராக பதவியேற்ற இவர் அப்போது இருந்த ஜனாதிபதியின் மரணத்தின் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்களை தன்வசப்படுத்திக்கொண்டார்.
- பாராளுமன்றத்தை தீயிட்டு கொளுத்திய ஹிட்லர் சகல அரசியல் கட்சிகளையும் தடைசெய்தார். எஸ்.எஸ் இராணுவம் மற்றும் கெஸ்டபோ இரகசிய பொலிசாரை பயன்படுத்தி கம்னியுசவாதிகளையும், யூதர்களையும் மிலேச்சத்தனமாக கொலைசெய்தார்.
- ஜேர்மனியை புதிய பாதைக்கு கொண்டு செல்லும் நோக்குடன் இவர் ஜேர்மனியை பலம் வாய்ந்த நாடாக உருவாக்குவதை நோக்கமாகாக கொண்டு செயற்பட்டார்.
- ஜேர்மனியில் நாசிசவாதத்தை தோற்றுவித்தார்.
- 1939 இல் ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்த காரணத்தினால் இரண்டாம் உலகமகா யுத்தம் தோன்றியது.

**(08 - புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

(28) WWW.PastPapers.WiKi (28)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA